செ.வெ.எண் : 06/ செப்டம்பர் நாள் : 02.09.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## மாவட்ட ஆதிதிராவிடம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக சட்டப்பட்டதாரிகள் தொழில் துவங்க நிதியுதவி

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் சட்டப்பட்டதாரிகள் சொந்தமாக தொழில் துவங்க அலுவலகம், மேசை, நாற்காலி வாங்குவதற்கு மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி திட்டத்தின் கீழ் ரூ.50,000/- மானியம் வழங்கப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் சட்டப்பட்டதாரிகள் புதியதாக தொழில் துவங்க இத்திட்டத்தின் கீழ் 2021-2022 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்களை புகைப்படத்துடன் பின்வரும் நிபந்தனைகளின் படி விண்ணப்பதாரர் இதற்கு முன்னதாக இத்திட்டத்தின் கீழ் பயன்பெறவில்லை என்பதை உறுதி செய்தும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

- ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- வயது வரம்பு 21-45-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- இந்தியாவில் எந்த மாநிலத்திலும் உள்ள சட்டக்கல்லூரியில் படித்து சட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- மூன்று அல்லது ஐந்து வருட கால பட்ட படிப்பினை படித்திருக்க வேண்டும்.
- மத்திய மாநில பார் கவுன்சில் உறுப்பினராக இருக்க வேண்டும்.
- நீதிமன்றத்தில் வழக்காடுபவராக இருக்க வேண்டும்
- இந்த நிதியுதவி ஒரு முறை மட்டுமே வழங்கப்படும்.

மேற்காணும் தகுதியுடைய நபர்கள் தகுந்த ஆவணங்களுடன் விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து 14.09.2021 அன்று மாலை 5.00 மணிக்குள் இராமநாதபுரம் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**